31
2-52
31

வள்ளுவர்

தமிழ் இலக்கணம்

(3, 4, 5, வகுப்புகளுக்குரியது)

புலவர் குழந்தை

...க்கம் நூற்பதிப்புக் கழகம்
ஈரோடு

1951 [விலை அணா 5

TB
P31 (3)
N51
88460.

வள்ளுவர்

தமிழ் இலக்கணம்

(3, 4, 5,-ஆம் வகுப்புகளுக்கு உரியது)

4 APR 1952
MADRAS

1943-ல்திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்டது.

புலவர், அ. மு. குழந்தை
தலைமைத் தமிழாசிரியர்
நா. க. உயர்நிலைப்பள்ளி, பவானி.

சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம்
ஈரோடு

பதிப்புரிமை] 1950 [விலை அணா 5

முதல் பதிப்பு 1950
இரண்டாம் பதிப்பு 1951.

APPROVED FOR CLASS USE BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.
VIDE FORT ST. GEORGE GAZETTE
SUPPLEMENT TO PART 1-B
DATED, 22-5-51 PAGE NO. 31.
FOR CLASS USE.

ஆனந்தா பிரஸ், ஈரோடு.

முகவுரை

குளத்துக்குக் கரை போன்றது ஒரு மொழிக்கு இலக்கணம். குளத்தின் அமைப்பே கரை; மொழியின் அமைப்பே இலக்கணம். கரையில்லாத குளம் போல, இலக்கண அறிவோடு கூடாத மொழியறிவினல் பய னில்லை. எனவே, இளமையிலிருந்தே சிறுவர்களுக்கு மொழியறிவோடு இலக்கண அறிவையும் புகட்டுதல் வேண்டும். இக்கருத்துடனேயே அரசியலார், தொடக்கப் பள்ளிப் பாடத்திட்டத்தில், மூன்ரும் வகுப்பிலிருந்தே இலக்கணப் பாடமும் குறித்திருக்கிரு‌ர்கள்.

வள்ளுவர் தமிழ் இலக்கணம் என்னும் இச்சிறு நூல், 1943-ல் அரசினரால் திருத்தி வெளியிடப்பட்ட தொடக்கப் பள்ளிப் பாடத் திட்டத்தின்படி மூன்று, நான்கு, ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் தகுதிக் கேற்றவாறு எழுதப் பட்டுள்ளது.

இள மாணவர்களுக்குத் தெரிந்த சொற்களைக் கொண்டு, மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இளஞ் சிறுவர்களுக்கு இன்பந் தருவனவும், தமிழ் மொழி யறிவையும், பொது அறிவையும் ஊட்ட வல்லனவுமான சொற்ருெடர்களும், அவர்களுக்கு விருப்பமான கதை களுமே பயிற்சிகளாகத் தரப்பட்டுள்ளன.

இளமாணவர்க்கு இந் நூல், இலக்கணப் பாடம் ‘வேம்பு’ என்னும் தப்பான எண்ணத்தைப் போக்கி, இலக்கணப் பாடம் ‘கரும்பு’ என விரும்பிக் கற்குமாறு செய்யும் என்று உறுதியாக நம்புகின்றனன்.

பவானி
15—10—50

அன்புள்ள,
குழந்தை.

பொருளடக்கம்.

மூன்றாம் வகுப்பு

I. எழுத்தியல்
II. சொல்லியல்
  1. பெயர்ச்சொல்
  2. வினைச்சொல்
III. சொற்றொடரியல்
  1. முற்றுப்புள்ளி

நான்காம் வகுப்பு

I. எழுத்தியல்
II. சொல்லியல்
  1. பெயர்ச்சொல்
  2. வினைச்சொல்
  3. காலம்
  4. இடைச்சொல்
  5. உரிச்சொல்
III. சொற்றொடரியல்
  1. பயனிலை
  2. எழுவாய்
  3. காற்புள்ளி
  4. மேற்கோட்குறி

ஐந்தாம் வகுப்பு

I. எழுத்தியல்
II. சொல்லியல்
  1. பெயர்ச்சொல்
    (1) திணை
    (2) பால்
    (3) எண்
    (4) இடம்
  2. வினைச்சொல்
    (1) வினைமுற்று
    (2) காலம்
  3. இடைச்சொல்
  4. உரிச்சொல்
III. சொற்றொடரியல்
  (1) எழுவாய், பயனிலை
  (2) முற்றுப்புள்ளி, காற்புள்ளி
  (3) மேற்கோட்குறி

வள்ளுவர்

தமிழ் இலக்கணம்

மூன்றும் வகுப்பு

I. எழுத்தியல்

அம்மா—இதில், 'அ, ம், மா' என மூன்று எழுத்துக்கள் உள்ளன.

அ-உயிர் எழுத்து. ம்-மெய் எழுத்து.

மா-உயிர்மெய் எழுத்து,

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

இவை பன்னிரண்டும் **உயிரெழுத்துக்கள் எனப்படும்.**

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

இவை பதினெட்டும் **மெய்யெழுத்துக்கள் எனப்படும்.**

பதினெட்டு மெய்யெழுத்துக்களோடும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தனித்தனி சேர்வதால், (18x12=216) இரு நூற்றுப் பதினாறு எழுத்துக்கள் உண்டாகின்றன.

அந்த இரு நூற்றுப் பதினாறு எழுத்துக்களும் **உயிர்மெய் எழுத்துக்கள்** எனப்படும். அவையாவன:

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

ஃ-இது, ஆய்த எழுத்து எனப்படும்.

உயிரெழுத்துக்கள்	....	12
மெய்யெழுத்துக்கள்	....	18
உயிர்மெய் எழுத்துக்கள்	....	216
ஆய்த எழுத்து	....	1

ஆகத் தமிழ் எழுத்துக்கள்...247

ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ-இவை ஐந்தும் **வடமொழி எழுத்துக்கள்.**

II. சொல்லியல்

" நெல் பயிர் விளை "

இது, ஔவையார் அமுத மொழி. இதில் 'நெல், பயிர், விளை' என மூன்று சொற்கள் உள்ளன.

நெ, ல்-என்னும் இந்த இரண்டு எழுத்துக்களும் சேர்ந்து, 'நெல்' என்னும் பொருளைத் தருவதால், இது ஒரு சொல் எனப்படும்.

'பயிர்' என்பதற்கும் பொருள் உண்டு. இது மூன்று எழுத்துக்கள் கொண்ட சொல். 'விளை' என்பதற்கும் பொருள் உண்டு. இது இரண்டு எழுத்துச் சொல்.

ஓர் எழுத்தே தனித்து நின்று பொருள் தருவதும் உண்டு. **கை, பை, தீ, பூ, வா, போ**-இவை ஓரெழுத்துச் சொற்கள்.

பயிற்சி 1.

கீழ்க் கண்ட வரிகளில் உள்ள ஓரெழுத்து, ஈரெழுத்து, மூன்றெழுத்து, நான்கெழுத்துச் சொற்களை எடுத்துக் காட்டுக :

1. மழை பெய்தால் பயிர் விளையும்.
2. பயிர் விளைந்தால் பஞ்சம் இல்லை.
3. காய் முற்றிப் பழம் ஆகும்.
4. பழம் தின்று பால் குடி.
5. நான் வருகிறேன், நீ போ.
6. ஈ மொய்த்தால் நோய் மொய்க்கும்.

1. பெயர்ச்சொல்

மணி அடிப்பதற்கு முன் நாம் பள்ளிக் கூடம் போக வேண்டும். 'மணி' என்பது **பெயர்ச்சொல்.**

முருகன் மிகவும் நல்ல பையன். 'முருகன்' என்பது **பெயர்ச்சொல்.**

எங்கள் மாடு பால் கறக்கிறது. 'மாடு' என்பது **பெயர்ச்சொல்.**

பயிற்சி 2.

கீழ்க் கண்ட வரிகளில் உள்ள பெயர்ச்சொற்களை **எடுத்துக் காட்டுக :**

1. காற்று வீசுகிறது.
2. மரம் அசைகிறது.
3. பூ உதிர்கின்றது.
4. பையன் எடுக்கின்றான்.

5. பெண் கேட்கின்றாள். 8. மலர் மணக்கிறது.
6. ஆசிரியர் வருகிறார். 9. பழம் இனிக்கிறது.
7. தம்பி படிக்கின்றான். 10. காய் துவர்க்கிறது.

பயிற்சி 3.

கோடிட்ட இடங்களில் தகுந்த பெயர்ச்சொற்களை எழுதுக:

1. — புல் தின்கிறது. 6. — காட்டில் வாழும்.
2. — பால் குடிக்கிறது. 7. — வீட்டில் இருக்கும்.
3. — பாடம் படிக்கிறாள். 8. — நீரில் நீந்தும்.
4. — பந்து ஆடுகிறாள். 9. — மரத்தில் ஏறும்.
5. — தெருவில் போகிறது. 10. — வானில் பறக்கும்.

ஒருமை—பன்மை

எறும்பு என்ற சொல் ஒரு பொருளைக் குறிக்கின்றது. **எறும்புகள்** என்ற சொல் பல பொருளைக் குறிக்கின்றது.

ஒரு பொருளைக் குறிக்கும் சொல் **ஒருமை** எனப்படும். பல பொருளைக் குறிக்கும் சொல் **பன்மை** எனப்படும்.

ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
பூ	பூக்கள்	கால்	கால்கள்
காய்	காய்கள்	கை	கைகள்
பழம்	பழங்கள்	கண்	கண்கள்
இலை	இலைகள்	பல்	பற்கள்
கிளை	கிளைகள்	காது	காதுகள்
வேர்	வேர்கள்	விரல்	விரல்கள்

பயிற்சி 4.

கீழ் வரும் சொற்களில் ஒருமை, பன்மை கூறுக :

1.	தாய்	6.	நண்பன்	11.	நாற்காலி
2.	தந்தை	7.	அன்பர்	12.	படங்கள்
3.	அண்ணன்	8.	மலர்	13.	நிலம்
4.	தம்பிமார்	9.	வேலைக்காரர்	14.	ஆறுகள்
5.	மக்கள்	10.	காய்க்காரி	15.	காடு

2. வினைச் சொல்

மாடு வருகிறது.

இதில், இரண்டு சொற்கள் உள்ளன. 'மாடு' என்னும் சொல் **பெயர்ச்சொல்** என்று முன்னமே அறிந்தோம்.

'வருகிறது' என்னும் சொல் எந்தப் பொருளுக்கும் பெயர் அன்று. அது மாடு செய்யும் தொழில் இன்னவென்று அறிவிக்கிறது. ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

நாய் ஓடுகிறது.

இதில், 'ஓடுகிறது' என்னும் சொல் நாயின் தொழிலைக் குறிக்கிறது. அதனால், அது **வினைச்சொல்** எனப்படும்.

முருகன்	**பாடுகிறான்.**	காக்கை	**கரைகிறது.**
வள்ளி	**ஆடுகிறாள்.**	கோழி	**கூவுகிறது.**
காற்று	**வீசுகிறது.**	தீ	**எரிகிறது.**
மழை	**பெய்கிறது.**	குழந்தை	**அழுகிறது.**

தடித்த எழுத்தில் உள்ள சொற்கள் வினைச்சொற்கள். இவை எல்லாம் இப்போது **செய்கின்ற** தொழிலை உணர்த்துகின்றன.

முன்பே **செய்த** தொழிலை உணர்த்தும் வினைச் சொற்களும் உண்டு. அவை:

ஆசிரியர் வந்தார்.	நான் சொன்னேன்.
பரணன் படித்தான்.	நீ எழுதினாய்.
பட்டம் பறந்தது.	அவன் சொன்னான்.
பந்து உடைந்தது.	அவள் கேட்டாள்.

இனிமேல் **செய்யும்** தொழிலை உணர்த்தும் வினைச்சொற்களும் உண்டு. அவை:

ஆசிரியர் வருவார்.	நான் சொல்வேன்.
பரணன் படிப்பான்.	நீ எழுதுவாய்.
பட்டம் பறக்கும்.	அவன் பேசுவான்.
பந்து உடையும்.	அவள் கேட்பாள்.

பயிற்சி 5.

கீழ்க்கண்ட வரிகளில் உள்ள வினைச் சொற்களை **முன்பே செய்த** தொழிலை உணர்த்தும் வினைச்சொற்கள் ஆக்குக:

1. அவன் எழுதுகிறான்.
2. நான் படிக்கிறேன்.
3. நீ விளையாடுகிறாய்.
4. அவர்கள் தூங்குகிறார்கள்.
5. தவளை கத்துகிறது.
6. மயில் அகவுகிறது.
7. புறாக் குடுவுகிறது.
8. கிளி பேசுகிறது.

பயிற்சி 6.

கீழ்க்கண்ட வரிகளில் உள்ள வினைச் சொற்களை **இனிமேல் செய்யும்** தொழிலை உணர்த்தும் வினைச்சொற்கள் ஆக்குக :

1. காற்று அடித்தது.
2. மழை பெய்தது.
3. நிலம் விளைந்தது.
4. நாடு செழித்தது.
5. மக்கள் மகிழ்ந்தனர்.
6. மாணவர் கற்றனர்.
7. அறிஞர் நிறைந்தனர்.
8. மூடர் குறைந்தனர்.

பயிற்சி 7.

கீழ்க்கண்ட வரிகளில் உள்ள வினைச் சொற்களை **இப்போது செய்கின்ற** தொழிலை உணர்த்தும் வினைச் சொற்கள் ஆக்குக :

1. அவன் போவான்.
2. அவள் வருவாள்.
3. நீ விளையாடுவாய்.
4. நான் படிப்பேன்.
5. பொழுது விழும்.
6. நிலாக் கிளம்பும்.
7. மல்லிகை மலரும்.
8. மணம் கமழும்.

ஒருமை-பன்மை

'பந்து' என்பது பெயர்ச்சொல். இது ஒரு பொருளைக் குறிப்பதால் ஒருமை எனப்

படும். 'பந்துகள்' என்பதும் பெயர்ச்சொல்லே. இது பலபொருளேக் குறிப்பதால் **பன்மை** எனப்படும். இந்த இலக்கணத்தை முன்பு படித்தறிந்தோம். இவ்வாறே, வினைச்சொற்களிலும் ஒருமை, பன்மை உண்டு.

புருப் பறக்கிறது.

இதில், 'பறக்கிறது' என்பது வினைச்சொல். இது ஒருபொருளின் தொழிலை உணர்த்துவதால் **ஒருமை வினை** எனப்படும்.

புருக்கள் பறக்கின்றன.

இதில் 'பறக்கின்றன' என்பது வினைச்சொல். இதுபலபொருளின் தொழிலை உணர்த்துவதால் **பன்மை வினை** எனப்படும்.

	ஒருமை	பன்மை
1.	நாய் ஓடுகிறது.	நாய்கள் ஓடுகின்றன.
2.	அவன் வந்தான்.	அவர்கள் வந்தார்கள்.
3.	பெண் பாடினுள்.	பெண்கள் பாடினூர்கள்.
4.	வண்டிக்காரன் வருவான்.	வண்டிக்காரர் வருவார்கள்.
5.	சிறுவன் விளையாடுகிருன்.	சிறுவர்கள் விளையாடு [கிருர்கள்.
6.	கோழி கூவும்.	கோழிகள் கூவும்.

பயிற்சி 8.

கீழ்க்கண்ட வரிகளில் உள்ள வினைச்சொற்கள் ஒருமையா, பன்மையா எனக் கூறுக :

1. பனம் பழம் விழுந்தது.
2. பரணன் எடுத்தான்.
3. எல்லோரும் தின்றார்கள்.
4. பசி தணிந்தது.
5. பந்து ஆடினர்.
6. மலர்கள் உதிர்ந்தன.
7. வள்ளி எடுத்தாள்.
8. மாலை தொடுத்தாள்.
9. பொழுது விழுந்தது.
10. மீன்கள் பூத்தன.

III. சொற்றொடரியல்.

பழம் பழுத்தது.

இதில், 'பழம்' என்பது ஒரு சொல். 'பழுத்தது' என்பது மற்றொரு சொல். இரண்டு சொற்களும் சேர்ந்து ஒரு கருத்து முடிகிறது. இவ்வாறு, இரண்டு முதலிய சொற்கள் சேர்ந்து ஒரு கருத்து முடிவது **சொற்றொடர்,** அல்லது **வாக்கியம்** எனப்படும்.

நான் பாடம் படித்தேன்.

இதில், மூன்று சொற்கள்சேர்ந்து கருத்து முடிந்திருக்கிறது. ஆகையால், இதுவும் ஒரு வாக்கியம் ஆகும்.

நான் தமிழ்ப் பாடம் படித்தேன்.

இது நான்கு சொற்கள் கொண்ட வாக்கியம்.

நான் தமிழ் இலக்கணப் பாடம் படித்தேன்.

இது ஐந்து சொற்கள் கொண்ட வாக்கியம்.

1. முற்றுப் புள்ளி

வள்ளி துணி தைக்கிருள்.

இது ஒரு வாக்கியம். இதன் முடிவில் ஒரு புள்ளி இருக்கிறது. இந்த வாக்கியத்தில் கருத்து முடிந்திருப்பதற்கு அடையாளமாக அந்தப் புள்ளி இடப்பட்டிருக்கிறது. அதற்கு **முற்றுப்புள்ளி** என்று பெயர்.

ஔவையார் ஆத்திசூடி பாடினர்.
திருவள்ளுவர் திருக்குறள் செய்தார்.
பாண்டியன் தமிழை வளர்த்தார்.

இங்கே மூன்று வாக்கியங்கள் உள்ளன. ஒவ்வொரு வாக்கியத்தின் இறுதியிலும் முற்றுப்புள்ளி உள்ளது.

ஒரு மயில் மழையில் நனைந்தது அது குளிரால். நடுங்கிக் கொண்டு இருந்தது பேகன் என்னும் வள்ளல். கண்டான் இரக்கம். கொண்டான் தன் போர்வையை எடுத்து. மயிலுக்குப் போர்த்தான்.

இதில் முற்றுப்புள்ளி இட்ட முறை தவறு. கருத்து முடியாத இடங்களில் முற்றுப்புள்ளி இடக்கூடாது ; கீழ் வருமாறு இட வேண்டும்.

ஒரு மயில் மழையில் நனைந்தது. அது குளிரால் நடுங்கிக்கொண்டு இருந்தது. பேகன் என்னும் வள்ளல் கண்டான் ; இரக்கம் கொண்டான். தன் போர்வையை எடுத்து, மயிலுக்குப் போர்த்தான்.

பயிற்சி 9.

கீழ் வரும் கதையில் ஏற்ற இடங்களில் முற்றுப்புள்ளி இடுக :

பாரி என்று ஓர் அரசன் இருந்தான் அவன் பறம்பு நாட்டின் தலைவன் அவன் யார் எதைக் கேட்டாலும் இல்லை என்னாமல் கொடுக்கும் வள்ளல் பாரி ஒரு நாள் தேரேறிக் கொண்டு ஒரு காட்டுக்குப் போனான் தேரை ஓர் இடத்தில் நிறுத்திவிட்டுக் காட்டைச் சுற்றிப் பார்த்து வந்தான் ஒரு முல்லைக் கொடி தேரில் படர்ந்து கொண்டது வள்ளல் அதைக் கண்டான் அதன்மேல் இரக்கம் கொண்டான் அவன் தேரை அங்கேயே விட்டுவிட்டு அரண்மனைக்குச் சென்றான் முல்லைக்குத்தேர் கொடுத்த வள்ளல் எனத் தமிழர் பாரியைப் புகழ்ந்தனர்.

மூன்றும் வகுப்பு முற்றிற்று.

நான்காம் வகுப்பு

I. எழுத்தியல்

1. குறில்.

அ இ உ எ ஒ

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் இரண்டு வரிசையாகஎழுதப்பட்டுள்ளன. மேல் வரிசையில் உள்ள ஐந்தும் ஒலித்தலைக் கவனியுங்கள் இவை, கீழ்வரிசையில் உள்ள எழுத்துக்களைப் போல் ஒலிக்க வில்லை. அவற்றைவிட இவை குறுகி ஒலிக்கின்றன. ஆதலால், இவை ஐந்தும் **குறில்** அல்லது **குற்றெழுத்து** எனப்படும்.

2. நெடில்

கீழ் வரிசையில் உள்ள ஏழும், மேல் வரிசையில் உள்ள ஐந்தையும் விட நீண்ட ஒலி உடையவை. ஆதலால், இவை ஏழும் **நெடில்** அல்லது **நெட்டெழுத்து** எனப்படும்.

3. **வல்லினம்.**

1. **க் ச் ட் த் ப் ற்**
2. **ங் ஞ் ண் ந் ம் ன்**
3. **ய் ர் ல் வ் ழ் ள்**

மேல் மூன்று வரிசையிலும் உள்ள மெய் எழுத்துக்களை ஒலித்துப் பாருங்கள். முதல்

வரிசையில் உள்ள ஆறு எழுத்துக்களும் மற்ற வரிசை எழுத்துக்களைப் போல் ஒலிக்கவில்லை. இவை ஆறும் வன்மையான ஒலி உடையவை. ஆதலால், இவை **வல்லினம்** அல்லது **வல்லெழுத்து** எனப்படும்.

4. மெல்லினம்.

இரண்டாவது வரிசையில் உள்ள ஆறு எழுத்துக்களும் வன்மையாக ஒலிக்கவில்லை. இவை ஆறும் மென்மையான ஒலி உடையவை. ஆதலால், இவை **மெல்லினம்** அல்லது **மெல்லெழுத்து** எனப்படும்.

5. இடையினம்

மூன்றாவது வரிசையில் உள்ள ஆறு எழுத்துக்களும் வன்மையான ஒலியும் இல்லை. மென்மையான ஒலியும் இல்லை. இவை ஆறும் இடைத்தரமான ஒலி உடையவை. ஆதலால், இவை **இடையினம்** அல்லது **இடையெழுத்து** எனப்படும்.

பயிற்சி 1.

1. உயிர் எழுத்துக்கள் எவை ?
2. அவை எத்தனை வகைப்படும் ?
3. குறில், நெடில்—எனப் பெயர் பெற்ற காரணம் என்ன ?
4. குறில், நெடில்—இவற்றின் வேறு பெயர் என்ன ?

5. மெய் எழுத்துக்கள் எவை ?
6. வல்லினம், மெல்லினம், இடையினம் என்றால் என்ன ?
7. இடை யெழுத்துக்கள் யாவை ?

பயிற்சி 2.

கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள குறில், நெடில், வலி, மெலி, இடை எழுத்துக்களை எடுத்தெழுதுக:

1. அவன் ஆலமரத்தில் ஏறினன்.
2. எல்லப்பன் வண்டி ஓட்டினன்.
3. ஊக்கம் உள்ளவன் உயர்வடைவான்.
4. ஔவையார் அறிவில் சிறந்தவர்.

II. சொல்லியல்

ஓர் எழுத்துத் தனித்து நின்றாவது, பல எழுத்துக்கள் சேர்ந்து நின்றாவது பொருள் தருவது **சொல்** ஆகும். (உதாரணம் 9-ஆம் பக்கம் காண்க.)

பயிற்சி 3

கோடிட்ட இடங்களில் தகுந்த எழுத்து ஒவ்வொன்றைச் சேர்த்தால் சொற்கள் ஆகும். அந்த எழுத்துக்களைக் கண்டு பிடியுங்கள்.

1.	நா —	9.	— மிழ்	17.	— ணக்கு
2.	வீ —	10.	— ழுத்து	18.	— ண்டி
3.	கா —	11.	பாட்—	19.	ச — டி
4.	ஏ —	12.	— ந்து	20.	— ருப்பு

5.	ஆ —	13.	— ரம்	21.	— ணவர்
6.	சே —	14.	— லை	22.	— கல்
7.	சோ —	15.	— ழை	23.	க.— வு
8.	கூ —	16.	— ளை	24.	— வர்

1. பெயர்ச் சொல்

ஒரு பொருளைக் குறிக்கும் சொல் **பெயர்ச் சொல்** ஆகும், (உதாரணம் 9-ஆம் பக்கத்தில் காண்க)

பெயர்ச் சொற்களில் ஒருமை, பன்மை உண்டு என்று முன்பு படித்தோம்.

ஆடு — ஆடுகள்
மலை — மலைகள்
பெண் — பெண்கள்

எனப் பன்மையாக வரும்போது, 'கள்' என்பது சேர்ந்து வருவதையும் முன்பு அறிந்தோம்.

சில பெயர்ச் சொற்களில் பன்மை வேறு வகையாகவும் வரும்,

ஒருமை		பன்மை
தாய்	—	தாய்மார் — தாய்மார்கள்
நண்பன்	—	நண்பர் — நண்பர்கள்
அவன்	—	அவர் — அவர்கள்
சிறுவன்	—	சிறுவர் — சிறுவர்கள்
நல்லவன்	—	நல்லவர் — நல்லவர்கள்
அது	—	அவை — அவைகள்

பயிற்சி 4

கீழ் வரும் சொற்களுக்குப் பன்மை கூறுக:

1. மாணவன்	5. இலை
2. வேலைக்காரன்	6. மலர்
3. தொழிலாளி	7. கனி
4. தமிழன்	8. காய்

பயிற்சி 5

கீழ் வரும் சொற்கள் ஒருமையில் எவ்வாறு வரும்,

1. தோழர்கள்	5. மாணவிகள்
2. கற்கள்	6. உழவர்கள்
3. அவர்கள்	7. விரல்கள்
4. சிறுமியர்	8. நகங்கள்

2. வினைச் சொல்

ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகும். (உதாரணம் 12-ஆம் பக்கத்தில் காண்க.)

வினைச் சொற்களிலும் ஒருமை, பன்மை உண்டு என்பதை முன்பு அறிந்தோம்.

கொடி படர்ந்தது — கொடிகள் படர்ந்தன.
படர்ந்தது — ஒருமை. படர்ந்தன — பன்மை

ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் போது வினைச்சொல் ஒருமையாக இருக்கும்.

பல பொருளின் தொழிலைக் குறிக்கும்போது வினைச்சொல் பன்மையாக இருக்கும்.

கொடிகள் படர்ந்தது
மாணவன் வந்தார்கள்.

இவை அவ்வாறு இல்லாமையால், பிழை ஆகும். இவற்றைத் திருத்தினால்,

கொடிகள் படர்ந்தன.
மாணவன் வந்தான்.

என்று ஆகும்.

பயிற்சி 6.

கோடிட்ட இடங்களில் தகுந்த வினைச் சொற்களை எழுதுக :

1. பூவில் தேன்—
2. தேன் இனிப்பாக—
3. மாடு பால்—
4. எருது வண்டி—
5. மயில் அழகாக—
6. கிளி இனிமையாகப்—
7. முருகன் பந்து—
8. வள்ளி மாலை—

3. காலம்

உண்டான்
உண்கின்றான்
உண்பான்

இவை மூன்றும் வினைச் சொற்களே. மூன்றும் ஒருதொழிலையே உணர்த்துகின்றன.

ஆனால், இவற்றின் பொருளில் வேறுபாடு உண்டு.

'உண்டான்' — இது, முன்னமே உண்டான்; உண்டு ஆயிற்று என்னும் பொருள் தருகிறது. தொழில் செய்த காலம் இறந்து விட்டது. இதன் காலம் **இறந்த காலம்** எனப் படும்,

'உண்கின்றான்'—இது, இப்போழுதுதான் உண்கின்றான்; உண்டுகொண்டு இருக்கின்றான். என்னும் பொருள் தருகிறது. தொழில் செய்கின்ற காலம் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. இதன் காலம் **நிகழ்காலம்** எனப்படும்.

'உண்பான்'—இது, இனிமேல்தான் உண்பான்; உண்ணத் தொடங்குவான் என்னும் பொருள் தருகிறது, தொழில் செய்யும் காலம் எதிர்பார்க்கப் படுகிறது. இதன் காலம், **எதிர் காலம்** எனப்படும்.

எனவே, இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் எனக்காலம் மூன்று வகைப்படும். ஆகையால், வினைச் சொற்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை :

1. இறந்த கால வினை
2. நிகழ் கால வினை
3. எதிர் கால வினை

பயிற்சி 7

கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்கள் **எந்த எந்தக் காலத்தைச்** சேர்ந்தவை எனக்கூறுக :

1. முருகன் பள்ளிக்கூடம் போனான்.
2. வள்ளி பாடம் எழுதுகிறாள்.
3. தாயார் சோறு சமைக்கிறார்.
4. தகப்பனார் ஏர் உழுவார்.
5. பந்து கிணற்றுக்குள் விழுந்தது.
6. நான் வானொலியில் பாடுவேன்.
7. அக்காள் துணி தைக்கிறாள்.
8. அண்ணன் ஆடு மேய்ப்பான்.

பயிற்சி 8.

கோடிட்ட இடங்களில் தகுந்த வினைச் சொற்களை எழுதுக :

1. நேற்று நீ எங்கு—
2. நாளை நான் ஈரோடு—
3. தமிழ் நாட்டில் ஆறுகள் பல—
4. இனி மேல் நான் பொய்—
5. சென்ற வாரந்தான் முருகன்—
6. அடுத்த மாதம் நான் சென்னைக்குப்—
7. நோய் வந்தவன் மருந்து—
8. மேற்குத் தொடர்ச்சி மலை மிகவும்—

3. இடைச் சொல்

அவள் குயில் போல் பாடினாள்,

அவள்—பெயர்ச்சொல், குயில்—பெயர்ச் சொல், பாடினாள்—வினைச்சொல், 'போல்' என்பது என்ன சொல்? அது ஒரு பொருளையோ, ஒரு பொருளின் தொழிலையோ குறிக்கவில்லை, எனவே, அது பெயர்ச்சொல்லும் அன்று: வினைச் சொல்லும் அன்று: இடைத்தரமான சொல், அது பெயரையாவது வினையையாவது சார்ந்து வரும் சொல் ஆகையால். அது இடைச் சொல் எனப்படும்.

பொன்னன் முருகனை அடித்தான்.

இதில், 'பொன்னன்'—பெயர்ச் சொல் 'முருகன்'—பெயர்ச்சொல். 'அடித்தான்' வினைச்சொல். முருகன் ஐ. 'ஐ' என்பது இடைச்சொல்

நானே கண்டேன்.

நான் ஏ. இதில், 'ஏ' என்பது இடைச் சொல்.

அவன் உண்டானா?

உண்டான் ஆ இதில், 'ஆ' என்பது இடைச்சொல்.

தாயார் வீட்டில் இருக்கிறார்.

வீடு இல். இதில் 'இல்' என்பது இடைச் சொல்.

அவன் மரத்தை வெட்டினான்.

மரம் அத்து ஐ. இதில், 'அத்து, ஐ' இடைச்சொற்கள்.

அவன் என்னைப் பல்லினால் கடித்தான்.

பல் இன் ஆல், 'இன், ஆல்' இடைச் சொற்கள்.

பயிற்சி 9.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள இடைச் சொற்களை எடுத்துக் காட்டுக.

1. நாய் திருடனைக் கடித்தது.
2. புலி பூனைபோல் இருக்கும்.
3. பந்தைக் காலினால் அடித்தான்.
4. பணத்தைப் பெட்டியில் வை.
5. பாலைப் பூனையா குடித்தது?
6. தலைக்கு எண்ணெய் தடவு.

4. உரிச்சொல்

முருகன் சாலப் பேசினான். (மிகப் பேசினான்)

நாகன் நனி தின்றான். (மிகத் தின்றான்)

இவற்றில் 'பேசினான்; தின்றான்' என்னும் வினைச்சொற்களின் தன்மையை மிகுதிப்

படுத்த, சால நனி, என்னும் சொற்கள் வந்திருக்கின்றன. இவை உரிச் சொல் எனப்படும்,

III. சொற்றொடர் இயல்

'பழம் பழுத்தது'

இது, ஒரு சொற்றொடர் அல்லது வாக்கியம் என்று மூன்றும் வகுப்பில் படித்தோம்,

'பழம் பழுத்து'

இதில், இரண்டு சொற்கள் தொடர்ந்து இருந்தாலும் கருத்து முடியவில்லை, ஆகையால், இது வாக்கியம் அன்று.

பழம் பழுத்து விட்டது,

இது வாக்கியம் ஆகிறது.

'முருகன் பாடத்தை சரியாக'

இதில், மூன்று சொற்கள் இருந்தாலும் கருத்து முடியவில்லை.

ஆகையால், இது வாக்கியம் அன்று.

முருகன் பாடத்தைச் சரியாகப் படித்தான்.

இது வாக்கியம் ஆகிறது.

பயிற்சி 10.

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களைச் சேர்த்து வாக்கியங்களை முடி.

1. பஃறண்ணன் பாடம் —
2. கூழ் ஆனாலும் குளித்துக் —
3. கந்தை ஆனாலும் கசக்கிக் —
4. படித்தால் பாடம் —
5. தமிழ்ப் பாட்டு இனிமையாக —
6. வள்ளி இனிமையாகப் —

எழுவாய்—பயனிலை

1, பயனிலை

ஆசிரியர் வந்தார்.

இது ஒரு வாக்கியம். வாக்கியத்தின் இறுதியில் உள்ள சொல் 'வந்தார்' என்பது. அந்தச் சொல் இருப்பதால்தான் கருத்து முடிகிறது. ஆகையால், அது **பயனிலை** எனப்படும்.

வள்ளி பாடினாள்.

இதில், 'பாடினாள்' என்பது பயனிலை.

தீ எரிந்தது.

இதில், 'எரிந்தது' என்பது பயனிலை.

பயிற்சி 11

கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பயனிலைகளை எடுத்துக் காட்டுக:

1. மாணவர் பந்து ஆடினார்கள்.
2. பந்து மரத்தில் பட்டது.
3. பழம் கீழே விழுந்தது.
4. பரணன் பழத்தை எடுத்தான்.
5. எல்லோரும் பங்கி உண்டார்கள்.

2. எழுவாய்

'ஆசிரியர் வந்தார்.'

இதில், 'வந்தார்' என்பது பயனிலை என்று அறிந்தோம். 'யார் வந்தார்?' என்று கேள்விகேட்டுப் பாருங்கள். 'ஆசிரியர்' என்ற பதில் கிடைக்கும்.

கீரன் எழுந்தான்.

இதில், 'எழுந்தான்' என்பது பயனிலை. 'யார் எழுந்தான்' என்ற கேள்வி பொருத்தம் அன்று. 'எவன் எழுந்தான்?' என்று கேட்கவேண்டும். 'கீரன்' என்ற பதில் கிடைக்கும்.

கண்ணகி பாடினள்.

இதில், 'பாடினள்' என்னும் சொல் பயனிலை 'யார் பாடினள்' 'எவன் பாடினள்' என்ற கேள்விகள் பொருத்தம் அல்ல. 'எவள் பாடினள்?' என்று கேட்கவேண்டும். 'கண்ணகி' என்ற பதில் கிடைக்கும்.

பால் இனிக்கும்.

இதில், 'இனிக்கும்' என்பது பயனிலை. 'யார் இனிக்கும்,' 'எவன் இனிக்கும்,' 'எவள் இனிக்கும்' என்ற கேள்விகள் பொருத்தம் அல்ல. 'எது இனிக்கும்?' என்று கேட்க வேண்டும். பால் என்ற பதில் கிடைக்கும்.

பறவைகள் வானில் பறக்கின்றன.

இதில், 'பறக்கின்றன' என்பது பயனிலை 'யார், எவன், எவள், எது,' என்னும் கேள்விகள் பொருத்

தம் அல்ல 'எவை பறந்தன?' என்று கேட்கவேண்டும். 'பறவைகள்' என்ற பதில் கிடைக்கும்.

மேற்கண்ட வாக்கியங்களில் பயனிலைக் கேற்றவாறு, 'யார், எவன் எவள், எது எவை' என்ற கேள்விகள் கேட்டோம். முதல் வாக்கியத்தில் 'ஆசிரியர்' என்ற பதில் கிடைத்தது. 'ஆசிரியர்' என்ற சொல் அந்த வாக்கியத்தில் **எழுவாய்** எனப்படும்.

இரண்டாம் வாக்கியத்தில் 'கீரன்' எழுவாய். மூன்றும் வாக்கியத்தில் 'கண்ணகி' எழுவாய். நான்காம் வாக்கியத்தில் 'பால்' எழுவாய். ஐந்தாம் வாக்கியத்தில் 'பறவைகள்' எழுவாய்.

ஆசிரியர், கீரன், கண்ணகி, பால், பறவைகள்—இவை எல்லாம் பெயர்ச் சொற்களே யாகும். ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் உண்டு. அது பெயர்ச்சொல்லாக இருக்கும்.

காட்டில் ஆடும் மாடும் மேய்கின்றன.

இதில், 'எவை மேய்கின்றன?' என்று கேட்டால், 'ஆடும் மாடும்' என்ற பதில் கிடைக்கிறது. இங்கே 'ஆடு, மாடு' என்னும் இரு சொற்களும் **எழுவாய்** ஆகும்.

பயிற்சி 12.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலைகளை எடுத்துக் காட்டுக.

1. கிழக்கே நிலாக் கிளம்பிற்று.
2. மேற்கே பொழுது விழுந்தது.
3. திருவள்ளுவர் திருக்குறள் செய்தார்.
4. நானும் அவனும் விளையாடினோம்.
5. காற்றும் மழையும் வந்தன.
6. பாவை பாட்டுப் பாடுகிறாள்.
7. தாயும் தந்தையும் வந்தனர்.
8. தமிழ் நாட்டைச் சேர சோழ பாண்டியர் ஆண்டார்.

3. காற்புள்ளி

'என் தாயார் நேற்றுச் சந்தைக்குப் போய், எனக்குத் தின்பண்டம் வாங்கி வந்தார்.'

இது ஒரு நீளமான வாக்கியம். வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளி இருக்கிறது. இடையில் 'போய்' என்ற சொல்லுக்குப் பக்கத்தில் ஒரு குறி இடப்பட்டிருக்கிறது. 'என் தாயார் நேற்றுச் சந்தைக்குப் போய்' என்பது ஒரு பிரிவாகவும், 'எனக்குத் தின்பண்டம் வாங்கி வந்தார்' என்பது ஒரு பிரிவாகவும் அமைந்திருக்கிறது. ஆகையால், படிக்கும் போது,

'போய்' என்னும் இடத்தில் கொஞ்சம் நிறுத்திப் படிக்கிறோம். அவ்வாறு நிறுத்திப் படிப்பதற்காகவே இந்தக் குறி இடப்பட்டிருக்கிறது. இதற்குக் **காற்புள்ளி** என்று பெயர்.

'நேற்றுக் காலை நான் பள்ளிக்கூடம் வரும் போது வழியில் ஒரு நாய் கடிக்க வந்தது. பொன்னன் வந்து அந்த நாயைத் துரத்தி என்னைக் காப்பாற்றினான்'

மேற்கண்ட வாக்கியங்களைப் படிக்கும் போது, சில இடங்களில் நொடிப்பொழுது நிறுத்திப் படிக்க வேண்டும் என்று தெரிகிறது. அந்த இடங்களில் காற்புள்ளி இட்டால் பின்வருமாறு அமையும் :

'நேற்றுக் காலை, நான் பள்ளிக் கூடம் வரும்போது, வழியில் ஒரு நாய் கடிக்க வந்தது. பொன்னன் வந்து, அந்த நாயைத் துரத்தி, என்னைக் காப்பாற்றினான்.

பயிற்சி 13.

கீழ்வரும் கதையைக் கவனித்துப்,படித்து ஏற்ற இடங்களில் காற்புள்ளி இடுக :

'ஒரு காட்டில் இருந்த ஒரு சிங்கம் அக்காட்டில் உள்ள விலங்குகளை எல்லாம் கொன்று தின்று வந்தது. விலங்குகள் எல்லாம் ஒன்றுகூடி அச் சிங்

கத்தினிடம் சென்று தினம் ஒவ்வொன்ருக வந்து இரையாவதாக வேண்டிக் கொண்டன. சிங்கம் அதற்கு இசையவே விலங்குகள் முறை வைத்துக் கொண்டு இரையாகி வந்தன.

ஒரு நாள் ஒரு கிழ முயலின் முறை வந்தது. முயல் கொஞ்ச நேரம் பொறுத்துச் செல்லவே சிங்கம் "ஏன் இவ்வளவு நேரம்?" என்று அதட்டிக் கேட்டது. முயல் "நான் நேரமே வந்தேன், வரும் வழியில் உன்போன்ற ஒரு சிங்கம் வரவே அது போகும் வரையிலும் மறைந்திருந்து வந்தேன்" என்றது. சிங்கம் "அப்படியா! அதைக் காட்டு" எனவே முயல் அழைத்துக் கொண்டு போய் ஒரு கிணற்றைக் காட்டிற்று. சிங்கம் அக் கிணற்றை எட்டிப் பார்த்தது. தன் நிழலை வேருெரு சிங்கம் என்று எண்ணி கிணற்றில் குதித்து இறந்தது. விலங்குகள் எல்லாம் முயலைக் கொண்டாடின.

4. மேற்கோட் குறி

'ஓதுவது ஒழியேல்"

இது ஒரு நீதிமொழி. இது, ஔவையார் பாடிய **ஆத்திசூடி** என்னும் நூலில் உள்ளது. இது ஆத்திசூடியில் இருந்து எடுத்து எழுதப் பட்டது. ஒருவர் நூலில் இருந்து எடுத்துக் கூறுகிரோம் என்பதற்கு ஒரு குறி (அடை

யாளம்) வேண்டும். இந்த நீதி மொழிக்கு " " இவ்வாறு குறி இட்டிருக்கிறது. இதற்கு **மேற்கோட் குறி** என்று பெயர்.

" கற்க கசடறக் கற்பவை " என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். "சூது விரும்பேல்" என்றார் ஔவையார்.

பிறர் கூறியதை நாம் எடுத்துக் கூறும் போது, இவ்வாறு மேற்கோட் குறி இட்டு எழுத வேண்டும்.

முருகன் நேற்று நேரங்கழித்துப் பள்ளிக்கு வந்தான். நான் கேட்க, "இனிமேல் நான் நேரமே வந்து விடுகிறேன்" என்று சொன்னான்.

இந்த வாக்கியங்களைக் கவனியுங்கள். முதல் வாக்கியம் நான் சொல்வது. "இனிமேல் நான் நேரமே வந்து விடுகிறேன் " என்பது நான் சொல்வது அன்று. அது முருகன் சொன்னது. முருகன் என்னிடம் சொன்னதையே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இது என்னுடைய பேச்சு அன்று ; பிறர் பேச்சு என்பதைத் தெரிவிப்பதற்கு மேற்கோட் குறி இடுவது வழக்கம்,

பயிற்சி 14.

கீழ் வரும் வாக்கியங்களில் மேற்கோட் குறி இடுக :

1. ஊக்கமது கைவிடேல் என்று ஔவையார் மொழிந்தார்.
2. நன்றி மறப்பது நன்றன்று என்றார் திருவள்ளுவர்,
3. கருத்துடன் படி என்றார் ஆசிரியர்.
4. கருத்துடன் படிக்கிறேன் என்றேன் நான்.

நான்காம் வகுப்பு முற்றிற்று.

ஐந்தாம் வகுப்பு.

I. எழுத்தியல்

உயிரும் உடம்பும் ஒன்று சேர்ந்து இருந்தால்தான் நாம் வாழ முடியும். உயிர் பிரிந்தால் நாம் வாழ முடியாது. உயிர் தானே இயங்க வல்லது. உடம்பு, உயிரோடு கூடினுல்தான் இயங்கும், தனித்து இயங்காது.

எழுத்துக்களிலும் உயிரும் உடம்பும் உண்டு. உயிர் பன்னிரண்டு மெய் பதினெட்டு. மெய்—உடம்பு. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் நமது மெய் போன்றவை.

உயிரும் உடம்பும் ஒன்று கூடி நாம் வாழ்கிறோம். அவ்வாறே, உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து ஓர் எழுத்தைப்போல் ஒலிக்கிறது. அது **உயிர்மெய் எழுத்து** எனப்படும் உயிரும் மெய்யும் சேர்ந்து உண்டானது உயிர் மெய்யெழுத்து.

பதினெட்டு மெய்யோடும் பன்னிரண்டு உயிரும் தனித்தனி கூடுவதால், இருநூற்றுப் பதினறு உயிர்மெய் எழுத்துக்கள் உண்டாகின்றன, (18x12=216, 6-ஆம் பக்கம் பார்க்க)

பயிற்சி 1.

1. எழுத்துக்களுக்கு உயிர், மெய் என்று பெயர் இட்ட காரணம் என்ன ?

2. உயிர்மெய் எழுத்து என்று பெயர் வரக் காரணம் என்ன ?

3. உயிர்மெய் எழுத்து எத்தனை ? எப்படி ?

4. க் + அ = க. க் + எ = கெ.

ட்+இ, த்+உ, ப் + ஐ, வ் + ஔ—இவற்றைச் சேர்த்து எழுதுக.

5. கு, செ, தீ, மை, வா—இவற்றைப் பிரித்து எழுதுக.

அ—இது குறில். ஆ—இது நெடில்.
க்—இது வல்லெழுத்து.
ங்—இது மெல்லெழுத்து.
ய்—இது இடையெழுத்து.

பயிற்சி 2.

கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள குறில், நெடில், வலி, மெலி, இடை எழுத்துக்களை எடுத்துக் காட்டுக.

1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
2. ஓடி ஆடுதல் உடம்புக்கு நல்லது.
3. ஆத்திசூடி ஔவையார் செய்தது.
4. இனிய தமிழ்மொழி இலக்கணம் படி.

II. சொல்லியல்

1. பெயர்ச் சொல் 3. இடைச் சொல்
2. வினைச் சொல் 4. உரிச் சொல்

எனச் சொல் நான்கு வகைப் படும். இந் நான்கு சொல்லும் நமக்குத் தெரியும்.

பெயர்ச் சொல்லில் **திணை, பால், எண் இடம்** என்பவற்றை அறிதல் வேண்டும்.

1. திணை

முருகன் படித்தான்.
மாடு மேய்கிறது.
பலகை உடைந்தது.

இவற்றுள், 'முருகன், மாடு, பலகை' என்னும் மூன்றும் பெயர்ச் சொற்கள் ஆகும். ஆனல், மூன்றுக்கும் வேறுபாடு உண்டு.

'முருகன்' என்பது பகுத்தறிவுள்ள மக்களில் ஒருவனைக் குறிக்கிறது. 'மாடு' என்பது பகுத்தறிவு இல்லாத ஓர் உயிரைக் குறிக்கிறது. 'பலகை' என்பது உயிரில்லாத ஒரு பொருளைக் குறிக்கிறது.

பகுத்தறிவுள்ள மக்களை **உயர்திணை** என்று கூறுவர். பகுத்தறிவு இல்லாத மற்ற உயிர்களையும், உயிர் இல்லாத பொருள்களையும் **அஃறிணை** என்று கூறுவர்.

எனவே, **உயர்திணை, அஃறிணை** எனத்திணை இரு வகைப்படும்.

2. பால்

பொன்னன் வந்தான்.

பொன்னி போனாள்.

இந்தச் சொற்றொடர்களில், 'பொன்னன், பொன்னி' என்னும் இரண்டும் உயர்திணைப்பெயர்ச் சொற்களே. ஆனால், 'பொன்னன்' என்பது ஓர் ஆணைக் குறிக்கிறது. 'பொன்னி' என்பது ஒரு பெண்ணைக் குறிக்கிறது. ஓர் ஆணைக் குறிக்கும் சொல் **ஆண்பால்** எனப்படும். ஒரு பெண்ணைக் குறிக்கும் சொல் **பெண்பால்** எனப்படும்.

மாணவர் படித்தார்.

'மாணவர்' என்பதும் உயர்திணைப் பெயர்ச் சொல்லே. இது ஒருவனைக் குறிக்காமல் ஆண்கள் பலரைக் குறிப்பதால், இதனை ஆண்பால் என்பதில்லை; **பலர்பால்** என்பது வழக்கம்.

மாணவிகள் விளையாடுகிறார்கள்.

'மாணவிகள்' என்பதும் உயர்திணைப், பெயர்ச் சொல்லே. இது ஒருத்தியைக் குறிக்காமல் பெண்கள் பலரைக் குறிப்பதால், இதனைப் பெண்பால் என்பதில்லை, **பலர்பால்** என்பது வழக்கம்.

மக்கள் வந்தார்.

'மக்கள்' என்பதும் உயர்திணைப் பெயர்ச் சொல்லே. இது பொதுவாக ஆண்மக்களையும், பெண் மக்களையும் குறிக்கிறது. இதனை ஆண்பால் என்றாவது பெண்பால், என்றாவது கூறுவதில்லை. இதனையும் **பலர்பால்** என்பது வழக்கம். இது ஆண் பாலும் பெண்பாலும் சேர்ந்த பலர்பால்.

ஆண்கள் பலரையும், பெண்கள் பலரையும், ஆண் பெண் பலரையும் குறிப்பது பலர்பால் ஆகும்.

நாய் ஓடுகிறது.

'நாய்' என்பது அஃறிணைப் பெயர்ச் சொல். இது ஒரு பொருளைக் குறிப்பதால் ஒன்றன்பால் எனப் படும்.

நாய்கள் ஓடுகின்றன.

'நாய்கள்' என்பதும் அஃறிணைப் பெயர்ச் சொல்லே. இது பல பொருளைக் குறிப்பதால் **பல வின்பால்** எனப்படும்.

1. ஆண்பால் 2. பெண்பால் 3. பலர்பால்	உயர்திணை
4. ஒன்றன்பால் 5. பலவின்பால்	அஃறிணை

3. எண்

இது ஒருமை, பன்மை என இருவகைப் படும். இவற்றை முன்பு படித்திருக்கிறோம். (21-ஆம் பக்கம் பார்க்க.)

4. இடம்

நான் படிக்கிறேன்.

இதில், 'நான்' என்பது பெயர்ச் சொல். பேசுகிறவன் தன்னை 'நான்' என்று கூறுகிறான். இது **தன்மை இடம்** எனப்படும். **பேசுவோன் தன்மை.**

நாம் படிக்கிறோம்.

பேசுகிறவன் தன்னோடு மற்றவரையும் சேர்த்துக்கொண்டு பேசும்போது, 'நாம்' என்கிறான். இதுவும் தன்மையே ஆகும்.

நான், யான்
நாம், யாம்
நாங்கள், யாங்கள்

இவை ஆறும் தன்மைப் பெயர்ச் சொற்கள்,

நீ படி.

இதில், 'நீ' என்பது பெயர்ச் சொல். பேசுகிறவன் தன் பேச்சைக் கேட்பவனை 'நீ' என்கிறான். இது **முன்னிலை இடம்** எனப்படும். **கேட்போன் முன்னிலை.**

நீர் படித்தீர்.

நீங்கள் படித்தீர்கள்.

பேசுகிறவன் தன்பேச்சைக்கேட்பவர் பலரைக் குறிக்க, 'நீர், நீங்கள்' என்கிறான். இச்சொற்களும் முன்னிலைச் சொற்களே ஆகும்.

நீ, நீர், நீங்கள் — இவை முன்னிலைப் பெயர்கள்.

'அவன் நேற்று என்னிடம் பேசிக்கொண்டு இருந்ததை நீ பார்க்கவில்லை ?'

இதில் 'அவன்' என்னும் பெயர்ச்சொல், பேசுகிறவனையும் கேட்பவனையும் குறிக்காமல், அவ்விரு

வராலும் பேசப்படுவோன் ஒருவனைக் குறிக்கிறது. இது **படர்க்கை இடம்** எனப்படும். **பேசப்படுவோன் படர்க்கை.**

'நீயும் நானும் போகும் போது ஒரு பெண் அங்கு நிற்கவில்லை? அவள்தான் அவர் மகள்.'

'அவள், அவர்' என்பனவும் படர்க்கைப் பெயர்களே. அது வர அவை ஓடின.

'அது, அவை' என்பவையும் படர்க்கைப் பெயர்களே யாகும்.

தன்மை, முன்னிலைப் பெயர்கள் அல்லாத மற்ற எல்லாப் பெயர்ச் சொற்களும் படர்க்கை யாகும்.

அவன் முருகன்.
அவள் வள்ளி.
அவர் மக்கள்.
அது ஆடு.
அவை ஆடுகள்.

இவை பத்தும் படர்க்கைப் பெயர்களே.

இடம் மூன்று வகைப்படும். அவை:

1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை

பயிற்சி 3.

1. சொல் எத்தனை வகைப்படும்?
2. பெயர்ச் சொல்லில் அறிய வேண்டியவை யாவை?

3. திணை எத்தனை வகைப்படும்? பால் எத்தனை வகைப்படும் ?

4. உயர்திணைக்கு உரிய பால்கள் எவை ?

5. ஒன்றன் பால் எத்திணைக்கு உரியபால் ?

6. பலர்பால், பலவின் பால்—வேறுபாடு என்ன ?

7. தமிழர், மரங்கள்—திணை, பால் கூறுக.

8. எண் எத்தனை வகைப்படும் ?

9. நாய், சிறுவர்—இன்ன எண் எனக் கூறுக.

10. இடம் எத்தனை வகை ?

11. அவள், மரம், நாம், முருகன், நீர், பறவைகள்—இன்ன இடம் என்று கூறுக.

2. வினைச் சொல்

முருகன் பாடம் படித்து
வள்ளி கோலம் போட்டு
பறவை வானில் பறந்து
மாடுகள் புல் மேய்ந்து

இவற்றில், ' படித்து ' போட்டு, பறந்து, மேய்ந்து'— என்பவை வினைச் சொற்கள். இவை பொருள் முற்றுமல் குறையாக நிற்கின்றன.

முருகன் பாடம் படித்தான்.
வள்ளி கோலம் போட்டாள்.
பறவை வானில் பறந்தது.
மாடுகள் புல் மேய்ந்தன.

இவற்றில், படித்தான், போட்டாள், பறந்தது, மேய்ந்தன' என்னும் வினைச் சொற்கள் பொருள் முற்றி நிற்கின்றன,

பொருள் முற்றி நிற்கும் வினை **முற்றுவினை,** அல்லது **வினைமுற்று** எனப்படும். பொருள் முற்றாத வினை **எச்சவினை** எனப்படும், எச்சம்-குறை

1. வினை முற்று.

பெயர்ச் சொற்கள் திணை, பால். எண், இடம்—இவற்றை உணர்த்துவது போலவே, வினை முற்றும் திணை. பால், எண். இடம்—இவற்றை உணர்த்தும்.

நடந்தான்	நடந்தேன்
நடந்தாள்	நடந்தோம்
நடந்தார்	நடந்தாய்
நடந்தது	நடந்தீர்
நடந்தன	

இவை வினை முற்றுக்கள்,

நடந்தான்,—உயர்திணை ஆண்பால்,ஒருமை, படர்க்கை வினைமுற்று.

நடந்தாள்—உயர்திணை,பெண்பால், ஒருமை படர்க்கை வினை முற்று,

நடந்தார்—உயர்திணை, பலர்பால், பன்மை படர்க்கை வினைமுற்று.

நடந்தது—அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை வினைமுற்று.

நடந்தன — அஃறிணை, பலவின் பால், பன்மை, படர்க்கை வினைமுற்று.

நடந்தேன்—தன்மை, ஒருமை வினைமுற்று.
நடந்தோம் – தன்மை, பன்மை வினைமுற்று.
நடந்தாய்—முன்னிலை, ஒருமை வினைமுற்று,
நடந்தீர்—முன்னிலை, பன்மை வினைமுற்று.

குறிப்பு: தன்மை, முன்னிலை வினைகளுக்குத் திணை, பால் இல்லை ; ஒருமை, பன்மை மட்டும் உண்டு.

2. காலம்

காலம் மூன்று வகைப்படும் (23-ஆம் பக்கம் பார்க்க :)

முருகன் நாளை வந்தான்.

இதில், ‘வந்தான்’ என்பது இறந்தகால வினை, ‘நாளை’ என்பது எதிர்காலத்தை உணர்த்துகின்றது. ஆகையால், காலம்பொருந்தவில்லை, ‘நாளை’ என்ற சொல்லோடு எதிர்கால வினைசேர்ந்தால் பொருந்தும். ‘வருவான்’ என்பது எதிர்கால வினை, ஆகையால், ‘முருகன் நாளை வருவான்’—என்று திருத்த வேண்டும்.

'இந்தப் பழம் நேற்று விழுகிறது.

இதில், 'விழுகிறது' என்பது எதிர்கால வினை. 'நேற்று' என்பதற்கு ஏற்ப இறந்த கால வினை இருக்கவேண்டும்.' ஆகையால்,

'இந்தப் பழம் நேற்று விழுந்தது.' என்று திருத்தவேண்டும்.

பயிற்சி 4.

கீழ்வரும் வாக்கியங்களில் காலம் பொருந்தும்படி வினைச் சொற்களைத் திருத்துக.

1. முருகன் நாளை முதல் பள்ளிக்கூடம் வந்தான்.
2. என் மாமா நேற்று இப்புத்தகம் தருகிறார்.
3. திருவள்ளுவர் திருக்குறள் செய்வார்.
4. மலை எப்போதும் நிலையாக நின்றது.
5. நீ இளமையில் அழகாக இருக்கிறாய்.
6. இந்த மரம் நேற்றுக் கீழே விழுகிறது.
7. நான் பெரியவன் ஆனால் அறிவாளி ஆனேன்.
8. உலகம் இன்றோடு உயர்வு பெறும்.

3. இடைச் சொல்

இடைச்சொல்லைப் பற்றி நான்காம்வகுப்பில் படித்தோம். (26-ஆம் பக்கம் பார்க்க)

ஊர் போனான்.

இந்தச் சொற்றொடர் பிழையாகத் தெரிகிறது. பொருளும் விளங்கவில்லை,

'ஊர்க்குப் போனான்'

என இரு சொற்களுக்கும் இடையே 'கு' என்பதைச் சேர்த்தால், சொற்றொடர் பிழையில்லாமல் அமைவதோடு, பொருளும் விளங்குகிறது. 'கு' என்பது இடைச் சொல்.

மரமை வெட்டினான்

பொருள் விளங்கவில்லை, 'மரம் ஐ' என்னும் சொற்களுக்கு இடையே 'அத்து' என்பதைச் சேர்த்தால், 'மரத்தை வெட்டினான்' என்று ஆகிறது, இப்போது பொருள் விளங்குகிறது,

'அத்து' என்பது இடைச்சொல்,

பொருள் தெளிவாக விளங்கவேண்டுமானால், வாக்கியங்களில் வேண்டு மிடத்து இடைச்சொற்களைச் சேர்க்கவேண்டும்,

ஐ, ஆல், கு, இல் இருந்து, உடைய, கண், அத்து, இன் முதலியவை இடைச்சொற்கள் ஆகும்,

பயிற்சி 5.

கோடிட்ட இடங்களில் ஏற்ற இடைச் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. நகம் — வெட்டினான்.
2. நாய் — அடித்தான்.
3. பள்ளி — போனான்.

4. அவன்—நாய்
5. நூல்—துணி நெய்தான்.
6. மீன் நீர்—நீந்துகிறது.
7. மாடி——இறங்கினான்.
8. நாற்காலி——இருந்தான்.

'மழை வருகிறது' என்றால்,
'மழை வருகிறதா?'
'மழை, வருகிறதோ?'

என்பது வழக்கம். 'வருகிறது' என்னும் பயனிலையோடு, 'ஆ, ஓ' என்பவற்றைச்சேர்க்கவே வாக்கியம் வினாவாக மாறியது.

வினா—கேள்வி.

'ஆ, ஓ'—இடைச் சொற்கள்.
'மழையா வருகிறது?'
'மழையோ வருகிறது?'

என, எழுவாயோடு 'ஆ, ஓ' என்னும் இடைச் சொற்களைச் சேர்த்தாலும் நேர்வாக்கியம் வினாவாக்கியம் ஆகும்.

பயிற்சி 6.

கீழ் வருவனவற்றில், நேர்வாக்கியங்களை வினாவாக்கியங்களாகவும், வினா வாக்கியங்களை நேர் வாக்கியங்களாகவும் மாற்றுக.

1. ஆசிரியர் வந்தாரா?
2. வள்ளி பாடுகிறாள்.
3. ஆற்றில் வெள்ளமோ வந்தது?
4. கல்மாரியா பெய்தது?
5. நாளை விடுமுறை.
6. தமிழ் இனிக்கும்.
7. தமிழா அழியும்?
8. பிஞ்சு பழுக்காது.

4. உரிச் சொல்

உரிச் சொல்லைப் பற்றி நான்காம் வகுப்

பில்படித்தோம். **சால, நனி** என்பவை **மிகுதி** குறிக்கும் உரிச்சொற்கள் என்று தெரிந்தோம். **உறு, தவ** என்பவையும் **மிகுதி** குறிக்கும் உரிச்சொற்களே.

பயிற்சி 7.

கீழ் வரும் வாக்கியங்களில் ஏற்ற இடங்களில் உரிச் சொற்களைச் சேர்த்துப் படியுங்கள்.

1. பொன்னி பாடினுள்.
2. அவர் பெரியவர்.
3. புலி பூனையைவிடப் பெரியது.
4. அவன் துயர் அடைந்தான்.
5. முருகன் என்னைத்திட்டினன்.
6. வள்ளுவர் சிறந்தவர்.

III. சொற்றொடரியல்

வாக்கியப் பொருத்தம்

1. எழுவாய்-பயனிலை.

முருகன் வந்தான்.

இந்த வாக்கியத்தில், 'முருகன்'—பெயர்ச்சொல் எழுவாய். வந்தான்—வினைச் சொல், பயனிலை.

முருகன்—உயர்திணை, ஆண்பால், படர்க்கைப் பெயர்.

வந்தான்—உயர்திணை, ஆண்பால், படர்க்கை வினைமுற்று.

இதனல் நாம் அறிவதென்ன ? ஒரு வாக்கியத்தில் எழுவாயும், பயனிலையும்—திணை, பால் முதலியவற்றில் ஒத்திருக்கவேண்டும் என்று அறிகிறோம். இவ்வாறு திணை, பால் முதலியன ஒத்திருக்காத

வாக்கியம் வழு ஆகும். வழு—பிழை. வாக்கியங்கள் வழு இல்லாமல் அமைந்து இருக்கவேண்டும்.

1. அவன் வந்தது.

இதில், ‘அவன்’ என்னும் எழுவாய் உயர்திணை. ‘வந்தது’ என்னும் பயனிலை அஃறிணை **திணைவழு** ஆனமையால், வாக்கியம் பிழையாயிற்று.

அவள் வந்தான்.

இதில், ‘அவள்’ என்னும் எழுவாய் பெண்பால். ‘வந்தான்’ என்னும் பயனிலை ஆண்பால். **பால்வழு** ஆனமையால், வாக்கியம் பிழை.

3. பழம் விழுந்தன.

இதில், ‘பழம்’ என்னும் எழுவாய் ஒருமை. விழுந்தன, என்னும் பயனிலை பன்மை **எண்வழு** ஆனமையால், வாக்கியம் பிழை.

4. ‘நீ’ வந்தேன்.

இதில், ‘நீ’ என்னும் எழுவாய் முன்னிலை. ‘வந்தேன்’ என்னும் பயனிலை தன்மை. **இடவழு** ஆனமையால், வாக்கியம் பிழை.

மேற்கண்ட வாக்கியங்களை வழுவில்லாமல் திருத்தினால், கீழ் வருமாறு அமையும்.

1. அவன் வந்தான் அல்லது அது வந்தது.
2. அவள் வந்தாள் அல்லது அவன் வந்தான்.
3. பழம் விழுந்தது அல்லது பழங்கள் விழுந்தன.
4. நீ வந்தாய் அல்லது நான் வந்தேன்.

திணை, பால், எண், இடம், வழுவாமல் பேசவும் எழுதவும் வேண்டும்.

பயிற்சி 8.

கீழ்வரும் சொற்றொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்துக :

1. கோழி கூவின. 6. அவன் வந்தாய்.
2. பூக்கள் மலர்ந்தது. 7. யார் பேசுகிறான்?
3. வள்ளி வந்தது. 8. அவர்கள் போனேன்
4. நான் போனார். 9. நாங்கள் உண்டான்.
5. முருகன் வந்தன. 10. நீ வருவேன்.

2. முற்றுப்புள்ளி, காற்புள்ளி.

உங்கள் பாட நூலில் உள்ள ஏதேனும் ஒரு பாடத்தைப் படித்துப் பாருங்கள். வாக்கியம் முடியும் இடங்களில் எல்லாம் நிறுத்திப் படிக்கிறீர்கள். அங்கே **முற்றுப்புள்ளி** காணப்படும். சில இடங்களில் சிறிது நேரம் நிறுத்திப் படிக்கிறீர்கள். அங்கே **காற்புள்ளி** காணப்படும். ஆகையால், புள்ளிகள் உள்ள இடங்களைக் கவனித்து, நிறுத்திப் படிக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால், முற்றுப்புள்ளியும், காற்புள்ளியும் எங்கெங்கு இடவேண்டும் என்பது எளிதில் விளங்கும்.

புள்ளிகள் உள்ள இடங்களில் நிறுத்திப் படிக்கவும், புள்ளிகள் இட்டு எழுதவும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

3. மேற்கோட்குறி.

பழமொழிகளையோ, பிறர் எழுதிய பாட்டுக்களையோ நாம் எடுத்தாளும் போது, அவற்றிற்கு **மேற்கோட்குறி** இடவேண்டும். பிறர் பேச்சை. அவர் பேசுவது போலவே எழுதும்போதும் **மேற்கோட்குறி** இடவேண்டும். உங்கள் பாடத்தில் மேற்கோட்குறி இட்டுள்ள இடங்களைக் கவனித்துப் படித்துவந்தால், நீங்களே அக்குறியிடப் பழகிக் கொள்ளலாம். "பழக்கம் வழக்கமாகும்."

ஐந்தாம் வகுப்பு முற்றிற்று.

188460

324
10 NOV 1951
MADRAS

எங்கள் வெளியீடுகள்

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய
மேற்பார்வையாளர்
திரு S. மீனாட்சிசுந்தரம் B. A., L. T., அவர்களால்
எழுதப்பட்ட **(CIVICS)**

	விலை	கெஜட் பக்.
ஆட்சி நூல் முதல் புத்தகம் 3-ம் வகுப்பு	0—5—0	14
ஆட்சி நூல் 2-ஆம் புத்தகம் 4-ம் வகுப்பு	0—6—0	13
ஆட்சி நூல் 3-ஆம் புத்தகம் 5-ம் வகுப்பு	0—8—0	13

கெஜட் தேதி 22—5—1951.

VALLUVAR TAMIL GRAMMAR

III, IV, V, CLASSES

BY

PULAVAR A. M. KULANDAI,

Tamil Pandit, Board High School, Bhavani.

Sivalingam Publishing House
ERODE

Copy Right.] [Price As. 5.